00262

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 06

EPU6332 – ஆரம்பக் கல்வியில் சமகால எழுவினாக்கள்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 29.06.2025 நேரம்: மு.ப 09.30 - மு.ப 11.30

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. ஒப்பீட்டுக் கல்வியைக் கற்பதனால் ஆசிரியருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் **ஐந்தினைப் (05)** பட்டியலிடுக.
2. சமூக கலாசார சூழலில் பல்லின சமூகம் என்பதற்கான வரைவிலக்கணத்தினைத் தருக.
3. கல்வியானது கட்டாயமாக தாய் மொழியில் வழங்கப்பட வேண்டுமா? உமது விமர்சனங்களை முன்வைக்குக.
4. கொள்கை வகுப்பாளர்கள் கல்வித்துறையில் தேசிய ஒற்றுமையை ஊக்கப்படுத்த மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் **மூன்றினை (03)** இனங்கண்டு விளக்குக.
5. இலங்கையின் ஆரம்பப் பாடசாலைகளின் முகாமைத்துவத்தில் காணப்படும் சவால்கள் **ஐந்தினை (05)** இனங்கண்டு விளக்குக.
6. பூகோளமயமாதலால் இலங்கையின் கல்வியில் ஏற்பட்டுள்ள சாதகமான விளைவுகள் பற்றிய உமது முன்னோக்கினை நியாயப்படுத்துக.
7. இலங்கையின் ஆரம்பக்கல்வியின் கலைத்திட்டத்திலும் ஆசிரியர் வழிகாட்டலிலும் காணப்படும் சவால்கள் **மூன்றினை (03)** இனங்கண்டு விபரிக்குக
8. "யப்பானில் கல்விக்கான சட்ட அதிகாரம்" பற்றி சுருக்கமான அறிமுகத்தினைத் தருக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. i. இலங்கையின் ஆரம்பக் கல்வி மட்டத்தில் பின்வரும் பிரச்சினைகள் தோற்றம் பெற ஏதுவாக அமைந்த காரணிகளை விளக்குக.
   - தேசிய மட்டப் பரீட்சைகளில் போட்டித்தன்மை
   - பிரத்தியேக (தனிப்பட்ட) வகுப்புக்களின் வளர்ச்சி

   (05x2=10 புள்ளிகள்)

   ii. மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளை இழிவளவாக்கும் வகையில் தேசிய மட்ட, பாடசாலை மட்டங்களில் அமுல்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை தர்க்க ரீதியான காரணங்களுடன் விளக்குக.

   (10 புள்ளிகள்)



103

10. i. பல்லினச் சமூகங்களின் விளைவாக கல்வித்துறையில் உருவான **ஐந்து (05)** சவால்களைச் சுருக்கமாக விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பல்வேறு இனப் பின்புலத்தினைக் கொண்ட மாணவரிடையே ஆரம்பக் கல்வி ஆசிரியர் பின்பற்ற வேண்டிய உத்திகளைப் பரிந்துரைக்குக.

**(10 புள்ளிகள்)**

11. i. இலங்கையின் கல்வி அமைப்பின் தரத்தினை விமர்சன பூர்வமாக பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

ii. இலங்கையின் கல்வித்தரத்தினைப் பேணுவதற்கான எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

12. இலங்கையின் ஆரம்பக் கல்வித்துறையில் கடந்த சில தசாப்பங்களாக குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் பின்வரும் குறைபாடுகள் தெளிவாகக் காணப்படுகின்றன.

- ஆரம்பக் கல்வி மட்டத்தில் பிள்ளைகள் பெறும் கல்வியின் தரம் குறைவாக உள்ளது.
- பெரும்பாலும் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுக்கான பயனுள்ள முகாமைத்துவநிலை காணப்படாமை.

i. இலங்கையின் ஆரம்பக் கல்வித்துறையில் இக்குறைபாடுகள் தொடர்ச்சியாகக் காணப்படுவதற்கான காரணங்களை பகுப்பாய்வு செய்க.

**(05 புள்ளிகள்)**

ii. நீங்கள் இனங்கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான உபாயங்களை விதந்துரைக்க.

**(08 புள்ளிகள்)**

13. i. நியூசிலாந்திலுள்ள வினைத்திறனுள்ள பாடசாலைகளில அவதானிக்கப்படும் போக்குகளை விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. இதனை ஒத்த கல்விப் போக்குகளை இலங்கையில் அமுல்படுத்துவதற்காக இலங்கையின் கல்விமுறையில் ஏற்படுத்த வேண்டுமென நீங்கள் பரிந்துரைக்கும் மாற்றங்களை விதந்துரைக்குக.

**(10 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -